**என்எஸ்பீ பண்ட் மனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட் - 2022**

---------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

என்எஸ்பீ பண்ட் மனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட்டின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

ஜஜ

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்காக கம்பனியை முன்னணி முகாமையாளராக நியமித்தமை தொடர்பாக பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 246,939,587 மொத்த பெறவேண்டிய மீதியில் 36 சதவீதத்திற்கு சமமான ரூபா 88,939,587 தொகை 2016 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ளது. | என்எஸ்பீ எவ்எம்சீ இதுவரை பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. சமீபத்திய கோரிக்கை 2022.12.15 இல் அனுப்பப்பட்டது. இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியால், நிதிகளை பெற்றுக்கொள்வது மேலும் தாமதமாகும். எனவே, நட்டக்கழிவு கணிப்பீட்டிற்காக மீதியை எடுத்து, அதற்கு பதிலாக பிணைமுறியை வழங்குமாறு கோரியுள்ளோம். | மேலதிக தாமதமின்றி பெறவேண்டிய தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை கம்பனி எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 1.6 தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எல்கேஏஎஸ் 24 இன் 13 – 19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஸ்ரீ லங்கா சேவிங் பாங் லிமிட்டட்டின் சக துணைக்கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற அனைத்து தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்களையும் கம்பனி வெளிப்படுத்தத் தவறியிருந்தது. அங்கே கம்பனியின் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை இனங்காண்பதற்கு முறையான பொறிமுறை காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | என்எஸ்பீ எவ்எம்சீ ஆனது, இறுதிக் கணக்குகளின் 36 ஆம் இலக்க குறிப்பில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் வெளிப்படுத்தியிருந்தது. | நியமத்தினது தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனி அனைத்து தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 இன் 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 17(ஈ) பிரிவு - சந்தை செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைந்த செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் | மதிப்பிழந்தமை மற்றும் நிலையான கடன் வசதி (எஸ்எல்எவ்) தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யத் தவறியமை காரணமாக இலங்கை மத்திய வங்கிக்கு தண்டப்பணமாக ரூபா 22,272,152 மொத்த தொகையை கம்பனி செலுத்த வேண்டியிருந்தது. | கம்பனி தண்டப்பணமாக ரூபா 16,127,826 தொகையை செலுத்த வேண்டியிருந்தது. மத்திய வங்கியின் கொள்கை வட்டி விகிதங்களின் அதிகரிப்புடன் 2022 ஏப்ரல் முதல் சந்தையில் ஏற்பட்ட வட்டி விகித அதிகரிப்பு காரணமாக, கம்பனியிடம் இருந்த பிணைமுறிகளின் பெறுமதிகள் குறைவடைந்து, இலவச பிணைமுறிகளின் பெறுமதி குறைவடைவதற்கு வழிவகுத்தது. மறுபுறம், சந்தை திரவத்தன்மை காலப்பகுதி முழுவதும் எதிர்மறை பெறுமதியாக அறிக்கையிடப்பட்டது. இதன் விளைவாக, கம்பனி மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடனை ஒரே இரவில் நிறைவேற்ற வேண்டியிருந்தது. பிணைமுறிகளை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும், தீர்ப்பனவு காலத்துடன் இணங்குவதற்கும், பின் அலுவலகத்தில் உள்ள | கம்பனி சீபீஎஸ்எல் இன் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டியதுடன் கம்பனியின் செயற்பாடுகளை மிகவும் பொறுப்பான முறையில் நடாத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சிரேஷ்ட உத்தியோகத்தர்களிற்கு ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. ஐஎல்எவ் ஐ செயற்திறனாக பயன்படுத்துவதற்காக மத்திய அலுவலகம் (middle office) மூலம் கண்காணிப்பு பொறிமுறை அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | லங்கா தீர்ப்பனவு முறைமை விதிகள் பதிப்பு 2.2 இன் 03 ஆம் தொகுதியின் 11.2 ஆம் பிரிவு | பிணைமுறிகள் (Securities) மற்றும் வாடிக்கையாளர் மீள்கொள்வனவுக்காக (repo) ஒதுக்கப்பட்ட பிணைமுறிகளைப் பயன்படுத்தி ஒரே நாளில் (Intra-day) கடன் வசதியை (ஐஎல்எவ்) பெற்றதன் காரணமாக, இலங்கை மத்திய வங்கிக்கு கம்பனி ரூபா 243,830,060 மொத்த தொகையை தண்டப்பணமாக செலுத்த வேண்டியிருந்தது. | விடய இல. 1.7.அ இல் கொடுக்கப்பட்டுள்ள கருத்து போலவே | கம்பனி சீபீஎஸ்எல் இன் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டியதுடன் கம்பனியின் செயற்பாடுகளை மிகவும் பொறுப்பான முறையில் நடாத்த வேண்டும். |
| (இ) | 2021 யூலை 09 ஆம் திகதிய 2021 இன் 01 ஆம் இலக்க சீபீஎஸ்எல் வழிகாட்டல் | மீளாய்வாண்டில் பல சந்தர்ப்பங்களில் 2022 திசெம்பர் 31 வரை கம்பனி குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூபா 2 மில்லியனைப் பேணத் தவறியிருந்தது. | என்எஸ்பீ எவ்எம்சீ ஆனது மேலதிக நட்டங்களைத் தவிர்ப்பதற்காக சந்தை வட்டி விகிதத்தில் அதிகரிப்பை எதிர்பார்த்து அதன் போர்ட்போலியோவை (portfolio) நட்டத்துடன் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது, எனினும், ஏப்ரலில் பெரிய கொள்கை விகித உயர்வு மற்றும் இதற்கு இணையான சந்தை விகித அதிகரிப்புடன், கம்பனி மேலதிக நட்டங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு அதனது போர்ட்போலியோவை நட்டத்தில் விற்பனை செய்ய வேண்டியிருந்தது. மேலும் சந்தைக்கான போர்ட்போலியோ குறியின் (portfolio mark) நியாயமான பெறுமதி குறைக்கப்பட்டதன் காரணமாக நட்டங்களும் ஏற்பட்டன. எனவே, தேறிய மற்றும் தேறாத | சீபீஎஸ்எல் இன் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை பேணுவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நட்டங்கள் இரண்டும் பதிவு செய்யப்பட்டன, மேலும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் குறைவடைந்தது. மேலும், முன்னைய ஆண்டு இலாபத்தின் மீது (2020) மேலதிக வரியை அறவிடுவதற்கான அரசாங்க தீர்மானத்தின் பிரகாரம் கம்பனி ரொக்க வரியாக ரூபா 260.8 மில்லியனை (அதற்கு பொறுப்பான உரிய தாய் வங்கி) செலுத்த வேண்டும். இத் தாக்கம் கம்பனியின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பிற்கு சாட்டுதல் செய்யப்பட்டது.<br><br>எனினும் என்எஸ்பீ இன் மூலதன உட்செலுத்தல் மற்றும் 2022 திசெம்பர் மாதத்திற்கான தேறியலாபத்தைப் பதிவு செய்தமை மூலம், கம்பனி 2022.12.31 இல் உள்ளவாறு காணப்படக்கூடிய ரூபா 2,946 மில்லியன் மூலதனத்தை பதிவுசெய்தது. | |
| (ஈ) | பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் என்ற தலைப்பின் கீழான 2019 திசெம்பர் 20 ஆம் திகதிய 2019 இன் 01 ஆம் இலக்க வழிகாட்டல்களின் 4.7 மற்றும் 4.8 ஆம் பிரிவுகள் | பிணைமுறிகளின் சந்தைப் பெறுமதியானது கொடுக்கல்வாங்கலின் முதிர்ச்சிக்கு முன்னர் எந்த நேரத்திலும் பிணைமுறிகளின் மீள்கொள்வனவு பெறுமதி/ மீள்விற்பனை பெறுமதிக்கு கீழே குறையும் சந்தர்ப்பத்தில், நேரடி வர்த்தகர் பங்கேற்பாளரான டிடிபி ஆனது குறித்த கொடுக்கல்வாங்கலிற்கு மேலதிக தகுதியான பிணைமுறிகளை ஒதுக்க வேண்டும்/ பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது தகுதியான பிணைமுறிகளின் | இது முக்கியமாக 2022 ஏப்ரலில் விலைவிகிதங்கள் திடீரென அதிகரித்ததன் காரணமாக ஆகும். பற்றாக்குறையை முகாமைசெய்வதற்கு என்எஸ்பீ எவ்எம்சீ ஆனது போதுமான அளவு பிணைமுறிகளை கையில் வைத்து பேணுவதற்கு என்எஸ்பீ இடமிருந்து ஒரு பாதுகாப்பான கடனைப் பெற்றுள்ளது. கிடைக்கக்கூடிய பிணைமுறிகளை முகாமைசெய்வதற்கு நேரடியான மீள்கொள்வனவு (repo) கடன் (ஒரே இரவில் மற்றும் கால அடிப்படையிலான மீள்கொள்வனவுகள்) குறைக்கப்பட்டுள்ளது.<br><br>மாதாந்த ரீதியாக கடன் பெற்றுக்கொள்ளும் நிலை உணர்திறன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறதுடன் எந்தவொரு பாதகமான தாக்கத்தையும் முகாமைசெய்வதற்கு வணிக | கம்பனி உரிய சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | |
|---|---|
| மொத்த சந்தை பெறுமதியானது குறித்த மீள்கொள்வனவு/ தலைகீழ் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் முதிர்ச்சி பெறுமதியை போதுமான அளவில் உள்ளடக்கியதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அளவிற்கு உரிய நாளில் லங்கா தீர்ப்பனவு முறைமையை மூடுவதற்கு முன்னர் காசாக கொடுக்கல்வாங்கலின் ஒரு பகுதியைத் தீர்ப்பனவு செய்ய வேண்டும்/ கொடுக்கல்வாங்கலின் ஒரு பகுதியை தீர்ப்பனவு செய்வதற்காக காசினை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், கம்பனி பல சந்தர்ப்பங்களில் குறித்த தேவைப்பாட்டுடன் இணங்கத் தவறியிருந்தது. | வங்கியுடனான நிதியளிப்பு ஏற்பாடானது பேச்சுவார்த்தையில் உள்ளது. |

## 1.8 தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் திறைசேரி முறைமையானது என்எஸ்பீ சேவையகத்துடன் இணைக்கப்பட்டிருக்காததால் கம்பனி அதன் காப்புப் பிரதி செயன்முறையை (back up procedure) கைமுறையாகச் செய்ய வேண்டியிருந்தது. இதனால், மனிதப் பிழைகள் மற்றும் அறவீட்டுச் சிக்கல்கள் இருப்பதற்கான அதிக நிகழ்தகவு காணப்படலாம், இதன் விளைவாக தரவின் துல்லியம் அதிக ஆபத்து உள்ளதாகும். | தற்போதுள்ள முறைமை இணைய அடிப்படையிலான முறைமை அல்ல; எனவே காப்பு பிரதி நடைமுறை பின்பற்றப்படுகிறது. புதிய முறைக்கு செல்லும் வரை, மாற்று வழியில்லை. | தரவின் துல்லியம் மற்றும் கிடைப்பனவு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, கம்பனியின் காப்புப் பிரதி செயன்முறையை தானியக்கமாக்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் தேறிய நட்டம் ரூபா 2,025,825,745 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,049,077 ஆக இருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 2,031,874,822 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடன்பெறுதல் கிரயம் அதிகரித்தமை, சீபீஎஸ்எல் இன் வழிகாட்டலை மீறியதற்காக செலுத்தப்பட்ட தண்டப்பணம், சந்தை வட்டி விகிதங்களில் அதிகரிப்பு மற்றும் ரூபா 2,518,396,414 தேறிய வர்த்தக நட்டம் ஏற்பட்டதன் விளைவாக குறைந்த இலாபமீட்டும் பிணைமுறிகள் நட்டத்தில் விற்பனைசெய்யப்பட்டமை என்பன இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரித்தல் அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளன.

| விபரம் | வேறுபாடு - சாதகமானது/ (பாதகமானது) (ரூபா) | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 899,007,129 | 62 | வட்டி விகிதங்கள் அதிகரித்தமை. |
| தேறிய வட்டி வருமானம் | (554,062,944) | (91) | தாயிடமிருந்து கடன் பெறுதல் மற்றும் தற்செயல் கடன் பெறுதல் என்பன அதிகரித்தமை. |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | (29,259,223) | (59) | என்எஸ்பீ காப்பாளர் கட்டணத்தை நிறுத்தியமை மற்றும் சில நம்பிக்கைப்பொறுப்பாளர் உடன்படிக்கைகளை முடிவுறுத்தியமை. |
| எவ்வீரீபிஎல் இல் நிதிக்கருவிகளில் இருந்தான தேறிய வர்த்தக ஆதாயம்/ (நட்டம்) | (1,903,010,935) | (309) | சந்தை வட்டி விகிதங்கள் அதிகரித்தமை மற்றும் மேலதிக நட்டங்களை இழிவுபடுத்துவதற்கு குறைந்த இலாபமீட்டும் பிணைமுறிகள் நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டமை. |
| ஆளணிக் கிரயம் | 6,824,667 | 17 | நிரந்தர பதவியணியினரின் சம்பளத் திருத்தம். |
| ஏனைய செலவினம் | 267,621,403 | 984 | நாணயமாற்று விகிதங்களின் அதிகரிப்பு காரணமாக புளும்பேர்க் (Bloomberg) கட்டணங்கள் மற்றும் சுவிப்ற் (SWIFT) கட்டணங்கள் அதிகரித்தமை.<br>சீபீஎஸ்எல் வழிகாட்டல்களை மீறியதற்காக ரூபா 259,957,886 தண்டப்பண கட்டணங்களின் கொடுப்பனவு |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **விபரம்** | **துறை** | | **கம்பனி** | |
|---|---|---|---|---|
| | **2022** | **2021** | **2022** | **2021** |
| உரிமை மீதான திரும்பல் (%) | 11.4 | (2.5) | (54.5) | 0.17 |
| சொத்து மீதான திரும்பல் (%) | 3 | (0.7) | (18.6) | (0.13) |
| இடர் நிறையிடப்பட்ட மூலதன போதுமை விகிதம் - (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 10%) | 23.2 | 42.8 | 36.7 | 22.36 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிறுவன நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், கம்பனியின் செயற்பாடுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் குழுவின் நோக்கங்கள் ஏஎல்சீஓ கூட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுவதால், அதனை கலைப்பதற்கு சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பொருந்தக்கூடிய வகையில் சபைக்கு உப குழுக்களை கம்பனி நிறுவ வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் பிரகாரம் அனைத்து வர்த்தக உடன்படிக்கைகளும் (deal tickets) வரிசையாக எண்ணப்பட்டு உரிய உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் சில சந்தர்ப்பங்களில் கம்பனியால் அதனுடன் இணங்க முடியாதிருந்தது. | அனைத்து வர்த்தக உடன்படிக்கைகளும் வரிசை எண்களின் வரிசையில் நிர்ணயம் செய்யப்படுகின்றதுடன் மத்திய அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் ஆகியவற்றில் உள்ள உரிய உத்தியோகத்தர்கள் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் ஒப்பந்தங்களை அங்கீகரிக்கின்றனர். எம்ஜஎஸ் நோக்கங்களுக்காக கைமுறையான வர்த்தக உடன்படிக்கைகள், ஒப்பந்த உறுதிப்படுத்தலிற்காக தொடர்புடைய வீஆர் உடன் உருவாக்கப்படுகின்றன. அதன் | கம்பனி செயற்பாட்டு கையேட்டின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

பிரகாரம், பின்வரும் புள்ளிகளைக் குறித்துக்கொள்ளவும்,

(i) விண்ணப்பத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள் உருவாக்கப்படுகின்றதுடன் வர்த்தக உடன்படிக்கைகள் இலாப கணிப்பீட்டு நோக்கத்திற்காக மாத்திரமே உருவாக்கப்படுகின்றன. எனவே, அங்கீகாரம் தேவைப்படுவதில்லை. (உதாரணம், CusInv2022080043/44/45)

(ii) வர்த்தக உடன்படிக்கைகளை அங்கீகரிப்பதற்கு தலைமை வர்த்தகரிற்கு அதிகாரம் உள்ளது.

(iii) சில சந்தர்ப்பங்களில், அங்கீகரிக்கும் அதிகாரி விடுமுறையில் இருந்த சந்தர்ப்பங்கள் உள்ளன.

எனினும், இந்த முரண்பாட்டை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம், மேலும் எதிர்கால நிகழ்வுகளில் இதைத் தவிர்ப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்போம். மேலும், புதிய முறைமையின் அமுல்ப்படுத்தல் மூலம் கைமுறையிலான வர்த்தக உடன்படிக்கையை உருவாக்கும் பகுதியை செயன்முறையிலிருந்து விலக்க முடியும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க பிணைமுறிகளின் வழக்கமான கொடுக்கல்வாங்கல்களை சரிபார்ப்பதற்கு, கொடுக்கல்வாங்கல்களுடன் இணங்காதமை மற்றும் எதிர்கொண்ட இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, நாளாந்த கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை கம்பனி நியமித்திருக்கவில்லை. | கம்பனியின் மத்திய அலுவலகம் நாளாந்த அடிப்படையில் அரசாங்க பிணைமுறிகளின் பெரும்பாலான கொடுக்கல்வாங்கல்களை கண்காணிக்கிறது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், வங்கியிலிருந்து உத்தியோகத்தர் ஒருவரை இரண்டாம் நிலை அடிப்படையில் நியமிப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுப்போம். | சம்பந்தப்பட்ட இடர்களைத் தணிப்பதற்கு நாளாந்த கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை கம்பனி நியமிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்காக என்எஸ்பீ தலைமை அலுவலகக் கிளையில் 2022 ஏப்ரல் 29 இல் பணத்தை வைப்பு செய்திருந்த வாடிக்கையாளருடன் தொடர்புடைய ரூபா 5,500,000 நிதியை சேகரிப்பதற்கு கம்பனி உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறியிருந்தது. கொடுக்கல்வாங்கல் திகதியிலிருந்து 10 மாதங்கள் கடந்த பின்னர் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் என்எஸ்பீ கிளை 2023 மார்ச் 07 இல் அத் தொகையை அனுப்பியிருந்தது. கம்பனியின் நிதி முகாமைத்துவத்தின் மீது சரியான உள்ளக கட்டுப்பாடுகளை கம்பனியால் பேண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வட்டி விகித அதிகரிப்புடன், வாடிக்கையாளர்களின் அரசாங்க பிணைமுறிகளில் முதலீடு செய்வதற்கான ஆர்வமும் அதிகரித்தது. எனவே, என்எஸ்பீ கிளைகளில் இருந்து ஏராளமான வாடிக்கையாளர்கள் முதலீடுகளில் ஈடுபட்டு, என்எஸ்பீ எவ்எம்சீ இற்கு வருகை தராமல் கிளைகள் மூலம் நிதி மற்றும் விண்ணப்பங்களை அனுப்புகின்றனர். 2022 ஏப்ரல் முதல் வாடிக்கையாளர் முதலீடுகளின் பணிச்சுமையை நிர்வகிப்பது கடினமாக இருந்தது. நிதிகள் மொத்தமாக தலைமை அலுவலகக் கிளையால் மாற்றப்பட்டதுடன் கணக்கிணக்கம் செய்ய முடியாதிருந்தது.<br><br>எனினும், மிகுதி பரிமாற்ற நிதியை உறுதிப்படுத்துவதற்கு எச்ஓபீ நீண்ட காலத்தை எடுத்திருந்தது. வாடிக்கையாளர் நிதிகளின் பற்றுச்சீட்டுக்கள் சரியாகக் கண்காணிக்கப்பட்டு, தற்போது தினமும் கணக்கிணக்கம் செய்யப்படுகின்றன. | நிதி முகாமைத்துவத்திற்காகவும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் வணிக நடவடிக்கைகளில் எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காகவும் முறையான உள்ளகக் கட்டுப்பாடுகளை கம்பனி பேணுதல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி புதிய திறைசேரி முகாமைத்துவ முறையை நிறுவுவதற்கு இந்திய கம்பனியுடன் (இந்தியாவில் உள்ள கிரெடன்ஸ் அனலிட்டிக்ஸ் கம்பனி) உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. கம்பனி 2022 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் முறைமையை கையளிப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் கம்பனியால் உரிய திகதிக்கு முன்னர் கணனியை கையளிக்க முடியாதிருந்தது. | என்எஸ்பீ-எவ்எம்சீ ஆனது 2022.09.30 இல் உள்ளவாறு தரவை மாற்றியுள்ளது, தற்போது கம்பனியின் பதவியணியினர் முறைமையில் கொடுக்கல்வாங்கல்களை பதிவுசெய்து மேலதிக அபிவிருத்திகளுக்கு தேவையான சிக்கல்கள் மற்றும் பகுதிகளைக் கண்டறிந்துள்ளனர். நம்பிக்கைக் குழுவும் (Credence team) முறைமையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. எனினும், ”நேரலைக்குச் செல்ல” முன்னர் அழிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. | கம்பனி தேவையற்ற தாமதங்களைக் கடந்து புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையை ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் காணப்படவில்லை. | என்எஸ்பீ எவ்எம்சீ ஆனது 2023.05.15 முதல் அமுலுக்கு வரும் வகையில் என்எஸ்பீ இலிருந்து இரண்டாம் நிலை அடிப்படையில் பிரதம முகாமையாளர் ஒருவரை நியமித்துள்ளதுடன் அவர் கம்பனியின் மனித வள செயற்பாட்டை கவனிப்பார். | கம்பனி எச்ஆர் செயற்பாடுகளுக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும் அல்லது பணி ஒதுக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பதவியணி பதவிநிலைகள், பொறுப்புக்கள், கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகள், ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவம், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பு திட்டத்தை (எஸ்ஓஆர்) கம்பனி கொண்டிருக்கவில்லை. | என்எஸ்பீ எவ்எம்சீ ஆனது எஸ்ஓஆர் ஒன்றை தயாரித்து ஏற்கனவே சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளது. | ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டமொன்று (எஸ்ஓஆர்) கம்பனியிடம் காணப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் வசதிக்காக மொபைல் செயலியை அறிமுகப்படுத்துவதற்கு கம்பனி திட்டமிட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 31 வரை கம்பனியால் அதை ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு கொண்டு வர முடியவில்லை. | மூன்று ஆண்டுகளுக்கு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்ற போதிலும், கம்பனி அதை வருடாந்தம் தயாரிக்கிறது. அதன் பிரகாரம் கணக்காய்வின் மதிப்பாய்வுக்காக சமீபத்திய செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 உள்ளது. நாங்கள் செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 இல் அதை உள்ளடக்கியிருக்கவில்லை. | அடையக்கூடிய இலக்குகளுடன் விவேகமான முறையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவொன்றை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 31 வரை கம்பனியால் அந்த பிரிவை நிறுவ முடியாதிருந்தது. | மூன்று ஆண்டுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்ற போதிலும், கம்பனி அதை வருடாந்தம் தயாரிக்கிறது. அதன் பிரகாரம் கணக்காய்வின் மதிப்பாய்வுக்காக சமீபத்திய செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 உள்ளது. நாங்கள் செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 இல் இதனை உள்ளடக்கியிருக்கவில்லை. | அடையக்கூடிய இலக்குகளுடன் விவேகமான முறையில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடு ரூபா 1,815,397 மாதாந்த கட்டணத்திற்கு தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு வெளியில் வழங்கப்பட்டுள்ளது, மேலும் 2022 யூன் 30 வரை காலாண்டு அறிக்கைகளையும் அதன்பின் மாதாந்த கணக்காய்வு அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கு இணங்கியிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 31 வரையிலும் 2022 ஆம் ஆண்டுக்காக இறுதியாக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கை எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, கம்பனியால் உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்களை சரியான நேரத்தில் இனங்காண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் உள்ளக கணக்காய்வு செயற்பாட்டின் செயற்திறன் கேள்விக்குரியதாக உள்ளது. | 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு 2022 ஒக்தோபர் வரை பூர்த்தியடைந்துள்ளதுடன் 2023 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காகவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகளை சமாளிக்கும் வகையில் உள்ளக கணக்காய்வின் சீரான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**4.3 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உரிய கணக்காய்வுக் குழு பட்டயத்தின் பிரகாரம் குறிப்பிட்ட ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் 04 சபை கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடாத்த வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்காக 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது, எனவே பீஏசீ இற்கு சமர்ப்பிப்பதற்காக எந்தவொரு அறிக்கையும் காணப்படவில்லை. | கணக்காய்வுக் குழு பட்டயத்தில் கூறப்பட்டுள்ள செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு சபை கணக்காய்வுக் குழு தேவைப்படுத்தப்பட்டவாறு கூட்டங்களை நடாத்த வேண்டும். |